சத்திய வேத

# பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

> முதலில் உண்மையைத்தான் தேடிக் காண வேண்டும். அப்புறம் அழகும் நலனும் உங்களுக்குத்தானே கிட்டும். கிறீஸ்துநாதர் தம் மலைப்பிரசங்கத்தில் இதைத்தான் போதித்தார். இந்த உண்மையையும், இந்த அழகையும்தான் நான் விரும்புகிறேன். இவற்றிற்காகவே வாழ்கிறேன். இவற்றிற்காகவே சாவேன்.
>
> — மகாத்மாகாந்தி

95-ம் புத். | 1970-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 21-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 44-ம் இல.

# பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசரின் இலங்கைத் தரிசிப்பு — 4-12-'70

பரிசுத்த தந்தை 6ஆவது சின்னப்ப பாப்பரசர் 1970-ம் ஆண்டு மார்கழி மாதம் 4-ந் திகதி இரவு 7-55மணிக்கு இலங்கையிலுள்ள கட்டுநாயக விமான நிலையத்தில் வந்திறங்கி, அங்கிருந்து அதே இரவு 9-55மணிக்குத் திரும்ப ரோமாபுரிக்குப் புறப்பட இருக்கிறார். விமான நிலையத்தில் புதிய "ரேர்மினல்" கட்டிடத்துக்குமுன் அவருக்கு அரசாங்க வரவேற்பு அளிக்கப்படும். இவ்வரவேற்பின்பின் நடைபெற இருக்கும் சமயஆராதனை, பழைய தளத்தின் "ரேர்மினல்"கட்டிடத்துக்கு முன்பாக நடைபெறும்.

பாப்பரசர் பிரயாணம் செய்யும் விமானம், இரவு 7-55மணிக்கு நிலையத்தில் இறங்கியதும், "ரேர்மினல்" கட்டிடத்துக்கு முன்பாக மெல்லென ஊர்ந்துசெல்லும். விமானக்கதவு திறந்தவுடன் பரி. தந்தை வாயிலில் தோற்றி, அவரது வழமையான முறையில் மக்களுக்குத் தம் உபசாரத்தைத் தெரிவித்துக் கொள்ளுவார். அவர் விமானப்படிகள் வழியாக கீழே இறங்கியதும், "மோகல் பெரு" என்னும் பேரிகை முழங்கும். கீழே இறங்கியதும், மகாதேசாதிபதி அவரை வரவேற்று, பிரதமர் சிறிமா பண்டாரநாயகா, வந்தனைக்குரிய கருதினல் கூறே, வத்திக்கான் ஸ்தானிகர் அதிமேற்றிராணியார் ஸ்ரொரே, போக்குவரத்து உள்நாட்டு விவகார மந்திரிமார் ஆகியவர்களைக் காண்பிப்பார். பரிசுத்த தந்தை இவ்வரவேற்புக் குழுவினருக்கு உத்தியோக முறையில்தம்முடன் வந்தவர்களில் அறுவரை அறிமுகஞ் செய்வார். இவர்கள் கருதினல்மார்களாகிய ரிசரூன்ற், ரூசாய் என்பவர்களும், அதிமேற்றிராணிமார்களாகிய பெனெலி, கசரேலி, பிக்னடோலி என்பவர்களும் மேற்றிராணியாராகிய மாட்டீன் என்பவருமே.

இதன்பின் மகாதேசாதிபதியும் பிரதமமந்திரியும் பரிசுத்த தந்தையை அவ்விடத்தில் ஆயத்தஞ் செய்யப்பட்டிருக்கும் மேடைக்குக் கூட்டிச்செல்ல மறுபிரமுகர்கள் அவர்களைப் பின்தொடர்வார்கள். பரிசுத்த தந்தையும் மகாதேசாதிபதியும் மேடையிலேறி நிற்கும்போது கடற்படை பான்ட் வாத்திய கோஷ்டியினர் தேசிய கீதங்களை ஒலிப்பர். இது முடிந்ததும் மகாதேசாதிபதி பரிசுத்த தந்தையை வரவேற்கும் உரை நிகழ்த்துவார். அதற்கு பரிசுத்த தந்தை விடையளித்தருளுவார்.

இதன்பின், பரிசுத்த தந்தை பிரதமமந்திரியுடனும் மகாதேசாதிபதியுடனும் சில நிமிஷங்கள் சம்பாஷித்துக் கொள்வார். உபசார மண்டபத்துக்குப் போகும்வழியில், கிறிஸ்தசபையினரல்லாத மறுசமயத்தலைவர்கள் பரிசுத்த தந்தைக்கு அறிமுகஞ் செய்யப்படுவர். இது நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, சமயவழிபாட்டுக்குத் தயார் செய்யப்பட்டிருக்கும் இடத்துக்கு அவ்வழிபாட்டில் கலந்துகொள்ள இருக்கும் உபசாரக்குழுவினர் வாகனங்களில் கொண்டு செல்லப்படுவர். அதன்பின் அவ்விடத்துக்கு பரிசுத்த தந்தை ஒழுங்கான முறையில் வரிசை வரிசையாக நிற்கும் மக்கள் அவரைப்பார்க்கக் கூடியதாக திறந்த ஜீப் இரதத்தில் பவனி செல்வார். அவர் பவனி செல்லும் ஜீப் வண்டியில் கருதினல் கூறே அடிகளாரும் பாப்பரசரின் காரியதரிசியும் அதிமேற்றிராணியார் மார்சின்கஸ் அடிகளாரும் கூடச்செல்வர்,

## திருப்பலி

பரிசுத்த தந்தை பலிபீட மேடையில்நின்று மக்களை உபசரித்தபின் பூசை வஸ்திரங்களைத் தரித்து திருப்பலியை ஆரம்பிப்பார்.

திருப்பலிமேடை அண்மையில் இலங்கை மேற்றிராணிமாருக்கும், மறு கிறிஸ்தவ சபைத் தலைவர்களுக்கும், பரி. தந்தையுடன் வரும் கோஷ்டியினருக்கும், அரசாங்க பிரமுகர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் பிரத்தியேகமான இடம் அமைக்கப்பட்டிருக்கும்.

திருப்பலியின்பின் இலங்கை மேற்றிராணிமாரும், மறு கிறீஸ்தவசபைத் தலைவர்க

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## பிலிப்பைன்ஸ் கருதினலின் வேண்டுகோள்

பிலிப்பைன்ஸ் தீவிலே இம்மாத இறுதியில் நடக்க இருக்கும் ஆசிய மேற்றிராணிமாரின் மகாநாடு சித்தியடைய உலக கத்தோலிக்கர் யாவரையும் தேவனிடம் செபிக்குமாறு அத்தேசக் கருதினல் சான்ரொஸ் அடிகளார் கேட்டிருக்கின்றார். 6ஆவது சின்னப்ப பாப்பரசர் அத்தேசத்துக்கு விஜயம் செய்யும் வைபவத்தை ஞாபகப்படுத்துமாறு பல இன தபால் முத்திரைகளும் வெளிப்படுத்தப்படுவதுடன் இம்மாதம் 27ஆம் தேதி ஒரு பகிரங்க விடுமுறை நாளாகவும் அனுசரிக்கப்பட அரசாங்கம் கட்டளை இட்டிருக்கிறது. பிலிப்பைன்ஸ் தேசத்திலுள்ளமக்கள் பெரும்பாலும் கத்தோலிக்கர்.

## தெரேசா தாயாருக்குப் பெரும் ஆதரவு

இந்தியாவில், வறியவர்கள், யாருடைய உதவியுமில்லாதவர்கள், குஷ்டரோகிகளுக்கு உதவி செய்ய தம்மை அர்ப்பணம்செய்து இச் சேவைக்கெனத் தம்மைப் பரித்தியாகம் செய்யும் கன்னியர் ஸ்தாபனத்தை நடத்திவரும் தெரேசா தாயார் சென்றவாரம் இங்கிலாந்தில் பல பாகங்களுக்கும் சென்று தமது வேலையில் மக்கள் பங்குபெறவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அவர் சென்ற இடமெங்கும் மக்கள் திரளாக ஒன்றுசேர்ந்து தம் மாலான பணஉதவிகளை ஈந்தும், சிலர் தம்மையே இதற்கென ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டனர். இந்தியாவில்மாத்திரம் 4,000,000 குஷ்டரோகிகள் இருக்கின்றனர் என்றும், கல்கத்தா நகரில் மாத்திரம் ஒரு இலட்சம் பேர் உண்டு என்றும் தமது கன்னியர் அங்கே செய்துவரும் வேலை ஒரு சிறு தொகையினருக்கே நன்மை அளிப்பதாகவும், ஆகையினால் இச் சேவையில் பலர் சேர்ந்துகொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

## எத்தியோப்பிய அரசர் பரிசுத்த தந்தையைச் சந்தித்தார்

சென்றவாரம், ஆபிரிக்காவின் அதி புராதன கிறிஸ்தவ தேசமாகிய எத்தியோப்பியாவின் அரசர் ஹெயிலி சலாசி வத்திக்கான் சென்று பரிசுத்த தந்தை 6 ஆவது சின்னப்ப பாப்பரசரைச் சந்தித்தார். எத்தியோப்பிய தேசத்தில் 12,000,000 "கொப்ரிக்" கிறிஸ்தவர்கள் வசிக்கின்றனர். சென்ற 1600 வருட காலமாக "கொப்ரிக்" கிறிஸ்தவ தலைவர் ஒருவர் பரிசுத்த தந்தையைத் தரிசித்ததே கிடையாது. ஆகவே இச் சந்திப்பில் "ஒற்றுமையை" விரும்பிய யாவரும் பெரும் மகிழ்ச்சி அடைகின்றனர். இவ்விரு சபைகளும் ஒன்றிக்கும் முயற்சிகளில் தீவிரமாய் இறங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எத்தியோப்பிய அரசவம்சமானது சலமோன் இராசா காலத்திலிருந்து தொடர்ந்து வருவதாகவும் ஹெயிலி சலாசி அவ் வம்சத்தின் 225ஆம் உறுப்பினர் எனவும் கருதப்பட்டு வருகின்றது.

## குருவானவர் ஆட்சிமன்றத்தில்

ஐக்கிய அமெரிக்க தேசத்திலே யேசுசபைக்குச்சேர்ந்த குருவாகிய வண. ரூபெட் டிறினன் சுவாமியார் அந்நாட்டு ஆட்சிமன்ற அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றார், இத்தேர்தலில் பங்குபெறுவதற்கு டிறினன் சுவாமியாருக்கு யேசுசபைத் தலைவர் அதி வண. பேதுரு அருப்பே அடிகளார் விசேஷ அனுமதி அளித்திருந்தார். இவரது முக்கிய கொள்கை யுத்தத்தை எவ்வகையிலும் ஒழித்தே தீரவேண்டுமென்பதே.

## கருதினல் குஷிங் காலமானார்

அமெரிக்க கருதினல்மாரில்பெயர்பெற்றவராக பல வருடகாலம் விளங்கி வந்தவரும், பொஸ்ரன் நகர அதிமேற்றிராணியாராகக் கடமையாற்றி வந்தவருமான கருதினல் குஷிங் அடிகளார் சென்ற வாரம் தமது 75ஆம் பராயத்தில் காலமானார் என்ற துக்க செய்தி கிடைத்துள்ளது. பல வருடகாலம் பல வியாதிகளினால் பீடிக்கப்பட்டிருந்தும் சென்ற மூன்று வருடங்களுள் பலமுறைகளும் அறுவைச் சிகிச்சைக்கு உட்பட்டிருந்தும் தமது உற்சாகத்தைச் சிறிதளவும் தளரவிடாதிருந்த கருதினலடிகள் அமெரிக்கரும் பிறருமாகிய கோடாகோடி மக்கள் அவரில் கண்டுள்ள பல வியப்புக்குரிய குணங்களுக்காக உண்மையாகவே நேசிக்கப்பட்டு வந்தவர், கருதினல் அடிகள் கென்னடி குடும்பத்தவருடன்போல் வறிய மக்களுடனும் தன் முழு அன்புடன் கொண்டாடி வந்தவர், வியாதியின் காரணமாக ஒருமாத காலத்தின் முன்புதான் தன் கடமைகளிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டார்.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரி. தந்தையின் அதிதூர பிரயாணம்

பரிசுத்த தந்தை 6-வது சின்னப்பர் இதுகால வரையும் செய்த வெளிநாட்டுப் பிரயாணங்களுள் இம்மாதம் 26-ம் திகதி தொடங்க இருக்கும் தூர கிழக்குப் பிரயாணமே அதிதூரம் கொண்டதாகும். இப்பிரயாணத்தின் போது பல தேசங்களை அவர் தரிசித்துக் கொள்ளுவார். பிலிப்பைன்ஸ் தேசம், சமோவா தீவுப் பிரதேசம், இந்தோனீசியா, அவுஸ்திரேலியா, இலங்கையாகிய இடங்களே அவரது தரிசனத்தை இப்பிரயாணத்தில் பெற்றுக் கொள்ளும் பாக்கியம் பெறும் இடங்களாகும். பல இனங்களையும், பல நிறங்களையும் கொண்ட மக்கள் இப்பாக்கியம் பெற்றவர்கள். 27-ம் திகதி தொடக்கம் 29-ம் திகதி வரையும் பிலிப்பைன்ஸ் தேசத் தலைநகரில் பல நிகழ்ச்சிகளிலும் பரிசுத்த தந்தை பங்கு பெறுவார். கிழக்கு ஆசிய மேற்றிராணிமாரின் மகாநாட்டில் பங்கு பெறுதலும், திருப்பலி ஒப்புக்கொடுத்தலும், 200 குருமாரை அபிஷேகித்தலும் அங்கு நடக்க இருக்கும் முக்கிய சம்பவங்களாகும். அதன் பின் 29-ம் திகதி அமெரிக்க ஆட்சியின் கீழிருக்கும் கிழக்கு சமோவா பிரதேசத்துக்கும், சுதந்தர பிரதேசமாகிய மேற்கு சமோவாவுக்கும் சமுகம் தருவார். அங்கிருந்து அவுஸ்திரேலியா சென்று, அங்கு நாலு நாட்கள் சிட்னிநகரில் தங்கியதன் பின் ரோமாபுரி திரும்பும் வழியில் இந்தோனீசியா தலைநகரமாகிய ஜகர்த்தாவிலும், ஹொங்கோங் தீவிலும் எமது புண்ணிய நாடாகிய இலங்கையிலும் சில மணித்தியாலங்கள் தங்கி இவ்விடங்களில் மாநாட்டு முதல்வர்களின் வரவேற்பை ஏற்று, திருப்பலி ஒப்புக்கொடுத்து இந்நாடுகளின் முன்னேற்றத்துக்காக மன்றாடி மார்கழி மாதம் 5-ம் திகதி ரோமாபுரியைச் சென்றடைவார்.

## ‘ஒற்றுமை இயக்கத்தின்வேகம் கூடுகின்றது’ என்கிறார் கருதினல் ஹீனன்

செவிடருக்குச் சேவை செய்ய விசேஷ பயிற்சி பெற்ற பல கிறிஸ்தவசபைகளுக்கும் சேர்ந்த குருமாருக்கு இருவாரங்களுக்கு முன் அவர்கள் பெற்ற பயிற்சிக்குரிய டிப்பிளோமா பட்டம் இங்கிலாந்தில் வெஸ்மினிஸ்ரர் தேவாலய மன்றத்தில் அளிக்கப் பெற்றது. அவ்வைபவத்தில் அங்கிளிக்கன் சபைத்தலைவர் கன்ரர்பெறி அதிமேற்றிராணியாராகிய டக்டர் ரும்சே அவர்களும், கருதினல் ஹீனன் அவர்களும் பங்குபெற்று உரை நிகழ்த்தினர். கருதினல் ஹீனன் ஆற்றிய உரையில் ஒற்றுமை இயக்கத்தின் மூச்சுக்குறைகின்றது எனச் சிலர் கிண்டல் செய்துவந்த பொழுதினும், உண்மை அதற்கு மாறாக இருக்கின்றது என்பதை வெளிப்படுத்தினார்: அதற்குச் சான்றாக, அங்கிளிக்கன் சபையினரால் தொடங்கப்பட்ட இச்செவிடர் சேவைப்பயிற்சியில் கத்தோலிக்க குருமாரும் பங்குபெற்று மக்களுக்குச் சேவை செய்யத் தம்மைத் தயார் செய்து கொள்வது ஒற்றுமை இயக்கத்தின் பயன்களில் ஒன்று என்பதை யாவரும் இலகுவில் விளங்கிக்கொள்ளலாம் என்றார் கருதினலடிகள்.

## மத்திய கிழக்கு நிலைமை பாப்பரசரின் கவலை

சகல அர்ச்சியசிஷ்டர்களின் திருநாளன்று சம்பேதுரு சதுக்கத்தில் பாப்பரசரின் ஆசீர்வாதத்தைப் பெற அங்கு திரண்டு நின்ற பல்லாயிரம் மக்களையும் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் ஆசீர்வதித்து அன்று விசேஷமாக, மத்திய கிழக்கு நிலைமை மேலும் மோசமாகி உலக யுத்தத்துக்கே வழிகோலாது இருக்க செபிக்குமாறு கேட்டுக்கொண்டார். துப்பாக்கிப்பிரயோக நிறுத்தத்தை மேலும் தொடர்ந்து அனுசரித்து வருவதன் அவசியத்தையும், ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தின் தீர்மானங்களின் சிறப்பையும் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் நாடுகள் உணரவேண்டுமென்று பரிசுத்த தந்தை பிரார்த்தித்தார்.

## மேற்றிராணியார் பங்குக் குருவாகின்றார்

நைஜீரியா தேசத்தில் கலபார் என்னும் பிரிவின் முதல் மேற்றிராணியாராக நியமிக்கப்பட்ட அதி வந்தனைக்குரிய யேம்ஸ் மொயினு அடிகளார், தமது 67-ம் பராயத்தில், அத் தேசத்தில் 40 வருட சேவைக்குப் பின்பு தனது ஜெனன தேசமாகிய அயர்லாந்துக்குச் சென்று ஒரு சிறு கிராமத்தில் விசாரணைப் பங்குக் குருவாகத் தொண்டு செய்ய இருக்கின்றார்.

## அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் நூற்றாண்டு விழா

அப்போஸ்தலிக்க கார்மேல் சபை 1870ஆம் ஆண்டு இந்தியாவில் ஆரம்பமாயிற்று. 1922ஆம் ஆண்டு இலங்கையில் தனது சேவையை ஆரம்பித்த இச் சபை தற்போது இலங்கையின் பல இடங்களிலும் இருபத்தொரு மடங்களைக் கொண்டதாகத் தொண்டாற்றிவருகிறது. யாழ்ப்பாண மேற்றிராசனத்தில், அச்சுவேலி, யாழ்ப்பாணம், கரவெட்டி ஆகிய இடங்களில் கார்மேல் சபை மடங்கள் அமைந்துள்ளன. மேற்படி சபையின் நூறுவது ஆண்டு நிறைவுதினம் 19-11-70இல் ஆகும். இவ் விழாவைச் சிறப்பிக்கும்முகமாக யாழ்ப்பாணத்திலுள்ள நான்கு கன்னியர் மடங்களும் ஒன்றுசேர்ந்து 27-11-70 வெள்ளி தினம் பி. ப. 5மணிக்கு ஆசனக் கோவிலில் திருப்பலி பூசை ஒப்புக்கொடுத்து, அதைத் தொடர்ந்து சிறுவர்களின் கதம்ப நிகழ்ச்சிகளையும் நடத்த முன்வந்துள்ளன.

எனவே இத் திருப்பலிப் பூசையில் பங்குபற்றி கதம்ப நிகழ்ச்சிகளையும் கண்டு களிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்.மேற்றிராசன கார்மேல் கன்னியர்கள்.

---

● பாப்பரசர்பிலிப்பைன்ஸ் நாட்டில் தங்கவிருக்கும் ஒரேயொரு நகரம் அதன் தலைப் பட்டணமாகிய மணிலாவாகும். அவுஸ்திரேலியாவிலே அவர் தரிசிக்க இருக்கும் ஒரே ஒரு பட்டணம் சிட்னியாகும். முந்தியதில் மூன்று தினங்களும், பிந்தியதில் நான்கு தினங்களும் அவர் செலவிடுவார். வத்திக்கானிலிருந்து சிட்னிநகர் அதிமிக தூரத்திலிருப்பதால் அதற்கு நடத்தும் பிரயாணமே அவரின் அதிகம் நீண்ட பிரயாணமாகும்.

## அங்கிளிக்கன் மேற்றிராணிமாரின் ஆலோசனை

இலங்கையிலே அங்கிளிக்கன் சபை மேற்றிராணிமாராயிருக்கிற கொழும்பு மேற்றிராணியார் ஹறல்ட் டீ சொயிசா அடிகளாரும், குருநாகல் மேற்றிராணியாராயிருக்கிற லக்ஷ்மன விக்கிரமசிங்க அடிகளாரும் சென்றவாரம் தம் சபையினருக்கு எழுதியிருக்கும் நிருபங்களில் இலங்கைக் கிறிஸ்தவர்கள் இந் நாட்டு மக்களின் விருப்பத்தை அறிந்து அவர்களால் நிறுவப்பட்டிருக்கும் மக்கள் அரசாங்கத்துக்கு பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றனர். அதேசமயம் தாங்கள் கிறிஸ்தவர்கள் என்பதை மறந்துவிடாது கிறிஸ்தவ முக்கிய பண்பாடாகிய பிறர் சிநேகத்தை கடைப்பிடித்து நாட்டின் முன்னேற்றத்துக்கு தம்மாலாகிய சகலத்தையும் செய்ய வேண்டுமெனவும் தூண்டியிருக்கின்றனர்.

## பிறேசில் நிலைமையை ஜனாதிபதி கவனிக்கின்றார்

பிறேசில் தேசம் பெரும்பாலும் கத்தோலிக்கர் உள்ள தேசமாயிருந்தபோதிலும் அத்தேச அரசாங்கம் அங்குள்ள குருமார், மேற்றிராணிமாரை அடக்கித் துன்புறுத்தி வந்ததன் காரணத்தை முந்திய பிரதிகளில் நேயர்கள் வாசித்திருக்கின்றனர். சீர்கெட்டுப்போன பொருளாதார நிலைமையைத் திருத்தி அமைக்க அரசாங்கம் தவறியதைக் குருமார் கண்டித்ததே அச்சீற்றத்தின் காரணமாகும். அதன் பயனாகக் குருமார், மேற்றிராணிமார்தானும் அரசாங்கத்தால் வதைபடப்பட்டு வந்ததை உலகம் அறிய வந்ததும் அத்தேச ஜனாதிபதியாகிய ஜெனறல் மெடிச்சி என்பவர் இக்கருமத்தில் கவனத்தைச் செலுத்தி வருகின்றார். மிக அண்மையில் கிடைத்த செய்திகளின்படி, குருமார் மேற்றிராணிமாரின்மேல் அரசாங்கம் இடும் தண்டனைகளை நிற்பாட்ட வேண்டுமென்று அவர் கட்டளை செய்திருக்கிறார்.

## மரணத்தின் பின்

—:( ம. சூசைநாயகம் — மன்னார் ):—

ஆவியது போனபின்னே ஆகு(ம்)நிலை கூறவெண்ணி
தாவியது என்னகமும் தருகின்றேன் இக்கவிதை
உள்ளபடி உந்தனுக்கு உரைக்கின்றேன் நன்மொழிகள்
தள்ளமுடி யாதபடி தக்கபல சிந்தனைகள்.

கரணம் போடுகின்றார் காசுபண ஆசையினால்
மரணம் எய்தும்நாள் மறந்துலகில் வாழுகின்றார்
மாண்டவனின் முன்னிருந்து மாரடித்து ஓலமிட்டால்
ஆண்டவனும் மனமிரங்கி அவ்வுயிரை அளிப்பானோ?

தேடிவைத்த செல்வமெங்கே? தேர்ந்தகல்வி ஞானமெங்கே?
நாடிவந்த நால்வர்எங்கே? நன்மைசெய்த வாழ்வுஎங்கே?
கால்நடந்த் தூரம்எங்கே? கண்டடைந்த நன்மைஎங்கே?
கால்ஓய்ந்து கைஓய்ந்து காய்ந்ததொரு கட்டையிங்கே.

கைகோர்த்த நண்பர்எங்கே? காசுபண ஆசைஎங்கே?
மெய்வாடி வற்றிவிட்டால் மேதினியின் இன்பமெங்கே?
மைந்தனென்ற அன்னையெங்கே? மனைவிபிள்ளை அன்புமெங்கே?
நைந்துநெஞ்சம் உருகுவதால் நாமடையும் நன்மைஎங்கே?

சிந்தைமகிழ் இன்பமெங்கே? சிற்றின்ப ஆசைஎங்கே?
விந்தைவிளை யாடலெங்கே? விழலான வாழ்வுஎங்கே?
போட்டுவந்த திட்டமெங்கே? பொன்மணிகள் ஆசைஎங்கே?
நாட்டுமக்கள் வாழ்த்துஎங்கே? நானிலத்து வாழ்வுஎங்கே?

அஞ்சியநம் வாழ்வுஎங்கே? ஆதனப் பெருமைஎங்கே?
மிஞ்சியது ஏதுஎங்கே? மேதினியின் செல்வமெங்கே?
ஜாதிமத பேதமெங்கே? யான்என்ற வன்மைஎங்கே?
நீதிஎன்று வாதுசெய்த நேர்மைமிகு நெஞ்சமெங்கே?

ஓடிவிளை யாடலெங்கே? ஒன்றுபட்ட வாழ்வுஎங்கே?
கூடிவிளை யாடலெங்கே? கூடுவிட்ட ஆவிஎங்கே?
நாகரீக வாழ்வுஎங்கே? நல்லஉடல் வீறுஎங்கே?
ஏகசெல்வ போகமெங்கே? ஏழைசெல்வர் பேதமெங்கே?

நாடுஉன்னை போற்றிடுமோ? நஞ்சனென்று தூற்றிடுமோ?
காடுகொண்டு செல்கையிலே கண்கலங்கி வாழ்த்திடுமோ?
வாசலுக்குக் கால்நீட்டி வைத்திடுவர் நின்னுடலை
நேசமுள்ள நெஞ்சினர்கள் நின்றுகண்ணீர் சிந்திடுவர்

கால்மேல் உனைவளர்த்தி கனிவான பாட்டிசைத்து
பால்நிலவே என்றவளும் பார்த்திடவும் பயந்திடுவள்
தோள்மேலே கைபோட்டு தோழனென்று ரைத்தவரும்
தேன்போலே உனைநினைத்து தொட்டிடவும் தயங்கிடுவர்;

ஓலமிட்டு அழுதிடுவர் ஓங்கிநெஞ்சில் அடித்திடுவர்
ஏலாமல் உன்னுடலை எடுத்தேக விட்டிடுவர்
மங்கிஉடல் மடிந்திடுமே மண்உன்னை உண்டிடுமே
உக்கிஉடல் உதிர்ந்திடுமே உணர்ந்திடுவாய் மானிடனே;

ஊனமுகி ஒழுகிடுமே உடல்புழுத்து நாறிடுமே
வீண்வாழ்வு வீண்வாழ்வு விழலான இவ்வாழ்வு
உன்பேரைச் சொல்லியிவ் உணவருந்தி இருந்திடுவர்
நின்னுடல் கரைந்திடுமே நீயெங்கு உணர்ந்திடுவாய்.

நின்வாழ்வை நினைத்திடுவர் நினைந்துருகி அழுதிடுவர்
என்வாழ்வு? என்வாழ்வு? என்றுசொல்லிப் புலம்பிடுவர்
இன்நாட்கள் உன்நினைவு சிந்தையிலே கொண்டிடுவர்
பன்நாளில் உனைமறந்து பல்லின்பந் தேடிடுவர்.

மண்ணோடு மண்ணாகும் மனிதஉடல் மாயஉடல்
எண்ணாதே இவ்வாழ்வு எந்நாளும் உண்டென்று
உன்னுலக வாழ்வுதனை உள்ளாதே நீமனிதா
பின்னுலக வாழ்வெண்ணி பேணிநட நின்வாழ்வில்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைபணியில் இறங்குவோம்

**"நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை. நானே உங்களைத் தெரிந்துகொண்டேன் ... நீங்கள் போய் பலனைத் தரும்படிக்கும் உங்கள் பலன் நிலைத்திருக்கும் படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன்" (அரு. 15: 16).**

திருமதி மார்கறெற் சவரிமுத்து

### ஆசிரியத் தொழில் ஆண்டவனின் அழைப்பு :

தற்செயலாகவோ சந்தர்ப்ப வசமாகவோ கட்டாயத்தின் நிமித்தமாகவோ, பிறபிழைப்பில்லாக் காரணத்தினாலோ நாம் அதை ஏற்றிருப்பது போல் தோன்றக்கூடும். அதில் நாம் ஈடுபடுவதற்கான கோடிக் காரணம் எதுவாயிருந்தாலும் உண்மையிலேயே அது இறைவன் நமக்கென ஒதுக்கிவைத்த ஒரு பளுவான பொறுப்பாகும். ஆசிரியப் பணி வெறும்பிழைப்பு மட்டும் அல்ல; அது ஒரு சமூக பணி; இறைபணி — இறைவனின் அழைப்பின் விளைவு அது. ஏனைய தொழில்களிலீடுபடுவோர் சடப்பொருளுடன் நிலத்தில், வணிகத்தில், கைத்தொழிலில் பணியாற்றுவர். ஆசிரியனோ குழந்தை உள்ளங்களை, இளைஞர் இலட்சியங்களை உருவாக்கி பண்பைப் பெருக்கி முழுமனித நிறைவு கொடுக்கும் சிற்பி ஆவான். மக்களின் அகவிருளை நீக்கி அஞ்ஞான அடிமைத்தனத்தைப் போக்கி நித்திய வாழ்விற்கான நெறிகாட்டி நிற்பது ஆசிரியப் பணியே. எல்லா மக்களுக்கும் மீட்பின் நற்செய்திகூறி கிறீஸ்துவில் எல்லாவற்றையும் ஒருமித்தல் இக்கடமையின் குறிக்கோள். கல்விப்பணியின் முக்கியத்துவத்தையும், புனிதத்துவத்தையும் வற்புறுத்துமிடத்து இரண்டாம் வத்திக்கான்சங்கம் கூறுவதாவது: "இது (கல்விப்பணி) நிறைவேற்றப்படாதிருக்குமிடத்து, வேறெதுவுங் கொண்டு இதனை நிறைவு செய்வது மிகவும் கடினம்." தமிழ் மரபும் ஆசிரியனைக் "குரு" என்றும், "எழுத்தறிவித்தவன் இறைவன்" என்றும் பெருமைப்படுத்தி அழைக்கிறது.

கிறீஸ்தவ ஆசிரியராகிய நாம் இத்தொண்டிற்கெனத் தனிப்பட்ட முறையில் அழைக்கப்பட்டிருப்பதால் கிறிஸ்து உலகில் நிறைவேற்ற வந்த மீட்புத் திட்டத்தின செயலாக்கத்தில விசேட பங்குபெற நியமிக்கப்பட்டவராம். கிறீஸ்து இறைவனின் திருவருட் சாதனம்; திருச்சபை கிறீஸ்துவின் திருவருட் சாதனம். பொதுநிலையினர் திருச்சபையின் திருவருட் சாதனமாயமைகின்றனர். பொதுநிலையினருள்ளும் ஆசிரியரே இவ்வழைப்பிற்கு குறிப்பான ஆற்றல், தகைமை, உரிமை, வாய்ப்பு ஆதியன உடையவர். எனவே பிறரிலும் பார்க்க இவர்களாலேதான் மிகச் சிறந்த அளவில் கிறீஸ்து மனுவுரு எடுத்து ஆற்றிய அலுவல் பயன்தரும் வழிகளில் நிறைவுறுகிறது; நிறைவுறுதலும் அவசியமே.

கிறீஸ்துவின் மீட்புப் பணியில் பங்குகொள்ள ஞானஸ்நானம், உறுதிப்பூசுதல் ஆகிய திருவருட் சாதனங்கள் நமக்குத் தகுதி அளிக்கின்றன. நம்மை இறைமக்கள் வரிசைக்கு உயர்த்தி இறைமகன் கிறீஸ்துவின் சாயலை நம் வாழ்விற் பதிய வைக்கிறது இறையருள். பணிவிடை பெறுவதற்கன்று; பணிவிடை புரிய வந்த கிறீஸ்துவைப் பின்பற்றும் அழைப்பின் தன்மை உணரும் ஒவ்வொரு ஆசிரியரிடமும் மீட்பின் சுனையாகிய கிறீஸ்துபரன் விடுக்கும் அறைகூவல்: "நீயன்றி வேறு யார் இதைச் செய்ய முடியும்?"

### கிறீஸ்து நிறைவேற்றிய அலுவலும் ஆசிரியரும் :

தம் கண்காணிப்பில் விடப்பட்டவர்களின் அறிவைப் பெருக்கி நல்வாழ்விற்கான நெறிகாட்டிக் கடன் புரியும் ஆசிரியர் திருச்சபையின் "உயிருள்ள உறுப்பினர்களாக படைத்தவரின் கொடையினாலும் மீட்பரின் அருளினாலும் தங்கள் முழு ஆற்றலுடன் திருச்சபைக்கு வளர்ச்சி அளிக்கவும் தொடர்ந்து அதைப் புனிதப்படுத்தவும் பாடுபடும்படி அழைக்கப்பெறுகின்றனர் (சங்க ஏடுகள்).

### I. குருத்துவ அலுவல்:

யேசு நித்திய குரு. அவர் மனுவுரு தாங்கி மீட்புத் திட்டம் நிறைவுற உலகிற் தோன்றினார். தம் முப்பணியில் நாமும் உரிமையுடன், கருத்துடன் ஒத்துழைக்க வேண்டுமென விரும்புகிறார். மக்களின் மீட்புக்காக குருவும் பலிப்பொருளும் தாமேயாகி அன்று கல்வாரிக் குன்றிலும், தொடர்ந்து இன்று நம் பீடங்களிலும் கிறீஸ்து தம்மைக் கையளிக்கிறார். ஆசிரியரும் தம் மாணவரின் ஆன்மீக நலனிற்காக தம் நேரத்தை, தம் ஆற்றல்களை அர்ப்பணித்துச் செயலாற்றுவர். தம்மைப் புனிதப்படுத்தி தம் சிறாரின் புனிதத்துவத்திற்காக உழைக்க விளிப்புள்ளவராய் இருத்தல் அவசியம். தம் செபங்கள், முயற்சிகள், தம் ஆன்ம உடல் வேலைகள், ஓய்வுகள், தம் குடும்ப பாடசாலை, சமூக வாழ்வின் நாளுவித இன்ப துன்பங்கள் — இவையாவும் நேரான முறையில் கையளிக்கப்பட்டபோது உயர் பலிப்பொருளாம் யேசுவின் வழியாய் ஞானப் பலிப்பொருள்களாய் மாறும் யேசு மத்தியஸ்தருமாவர். ஆசிரியரும் மாணவரின் வாழ்வில் சதா ஏற்படும் பிரச்சனைகளில் சீரமைப்பு வழியைச் சுட்டி நிற்கும் மத்தியஸ்தராய் செயலாற்ற வேண்டி இருக்கிறது. பெற்றோர், கலாசாலை அதிகாரிகள், சகமாணவர், சமூக சமயத் தலைவர், உற்றார் உறவினர் பிறர் அனைவருடனும் மாணவர், கொள்ளும் உறவு, உரையாடல்களில் கிறீஸ்தவ மனப்பாங்கு விளங்க அவர்களுக்குப் பயிற்சி அளித்தல் குருத்துவ பணியில் பங்கு கொள்ளும் ஆசிரியரின் கடமையாகும்.

### II. இறைவாக்குரைக்கும் அலுவல்:

அடுத்து ஆசிரியர் கிறீஸ்துவின் இறைவாக்குரைக்கும் பணியில் சகஊழியராய் அமைகிறார்கள். இறைவாக்குரைத்தல் என்பது நற்செய்தி பரப்புதல். இது போதனையால் மட்டும் சாத்தியமாகாது. சாதனையும் முக்கியமானது. வாக்கின் பணியும் செயலின் பணியும் இணைந்தே செல்ல வேண்டும். தான் நன்றாய் அறிந்ததையே பிறர் அறிய வைக்கமுடியும், எனவே ஆசிரியர் மறைப் பயிற்சி மிக்கவராய் தகுந்த அளவில், முற்போக்கான முறையில் காலம், சூழ்நிலை, வாழ்க்கைத்தரம் ஆதியவற்றின் தன்மைக்கேற்ப மாணவருக்குக் கற்பித்தல் அவசியம். ஆசிரியரது வாழ்வின் சான்றே இக்கல்விப் பயிற்சிக்குச் சிறந்த துணைக்கருவியாகும். "வாழ்வென்னும் சான்றினாலும் போதகத்தினாலும் கிறீஸ்துவைப் பிறருக்கு அறிவிப்பின், இந்நற்செய்திப் போதகம் தனிச்சிறப்புப் பெறும்; தனிப்பட்ட முறையில் பயனும் விளைவிக்கும்" (சங்க ஏடுகள்). மேலும் திருப்பணியாளரின் பணிகளிற் குறையேற்படும் காலத்தில் இடத்தில் நிறைவு செய்து சேவை புரிதல் ஆசிரியரது பிரதான கடமைகளுள் ஒன்று.

### III. அரச அலுவல் :

கிறீஸ்துவின் அரசு உலகில் பரவி மக்களது மண்ணுலக வாழ்வு விண்ணுலக வாழ்வுடன் தொடர்பு கொண்டிருக்க வேண்டும். விசுவாச உணர்வு மக்கள் உள்ளங்களில் இறை அரசின் தன்மையை ஒளிர்விக்க வழிகாட்ட வேண்டியவர் ஆசிரியர். உலக அலுவல்களில் கிறீஸ்துவின் அரசை நிலைநாட்டவும், பிறரில் கிறீஸ்துவைச் சந்தித்து அன்புசெய்யவும் மாணவர் தூண்டப்பட வேண்டும். பாரபட்சம் பாராது, உண்மையின், அருளின், அமைதியின், அன்பின், நீதியின் அரசை சாதாரண சூழ்நிலையில் நிறுவுவதற்கு உழைத்தலே கிறீஸ்துவின் அரச அலுவலில் பங்குகொள்ளுவதாகும். எவ்வித மனிதச் செயலையும் இறைவனின் ஆளுகையிலிருந்து பிரித்துக் கணிக்க முடியாது என்பதை மாணவர் உணர்ந்து செயல்படப் பழக்கப்படுதல் அவசியம். கிறீஸ்து சாவுமட்டும் கீழ்ப்படிதலுள்ளவராயிருந்தார். கிறீஸ்துவின் அரசு பணியின் அரசு, ஊழியத்தின் அரசு. சங்கப் பிதாக்கள் கண்ட உண்மையும் இதுவே. "தம் சீடர்களும் அரச சுதந்திரம்கொண்டவர்களாய், தம் ஒறுத்தலாலும் புனித வாழ்வாலும் தம்மிலுள்ள பாவ அரசை வெல்லவும் நம் அயலாரில் கிறீஸ்துவுக்குப் பணிசெய்து, தாழ்ச்சியுடனும் பொறுமையுடனும் தங்கள் சகோதரர்களையும் கிறீஸ்துவிடம் கூட்டிவரவுமே இந்த அதிகாரத்தை அவர்களுக்கு வழங்கினார். கிறீஸ்துவுக்கு ஊழியஞ் செய்வதே ஆள்வதாகும்."

வளரும்.

---

✻ போத்துக்காலின் தலைப் பட்டணமாகிய லிஸ்டன் நகருக்கு மேலாகக் காட்சியளிப்பதாய், அங்கு ராகுஸ்நதியின் தென்கரைப்புறமாகவுள்ள அல்மாடாகுன்றின்மீது 266 அடி உயரமான ஆதாரபீடத்தின் 91 அடி உயரமுள்ள பிரமாண்டமான கிறிஸ்து இராசாவின் சுரூபம்ஒன்று நிறுவிநிற்கின்றது. இதனைக் கொங்கிறீற் கொண்டு அமைத்துமுடிக்க ஏழுவருடகாலம் பிடித்தது. இரண்டாவது மகாயுத்த பயங்கரங்களிலிருந்து போர்த்துக்காலைக் காப்பாற்றியதற்கு நன்றியாக அப்போது செய்யப்பட்ட வாக்குறுதியின்படியே இது நிறுவப்படலாயிற்று.

---

## இல்லையம்மா

இராகம்; சாருகேசி                தாளம்: திஸ்ர ஏகம்

நேற்றிருந்தார் இன்று இல்லையம்மா — புவி
வீற்றிருந்தார் வென்ற தில்லையம்மா — ஐயோ

சாவின் கொடுந் தொல்லை தீராதம்மா — இந்தப்
பூவின் படுந்துயர் போதாதம்மா — அம்மா

காலம் கணக்குகள் பாராதம்மா — சாவு
ஓலம் அழுகைக்கும் ஓயாதம்மா
கோலம் எதுவென்று பேணுதம்மா — சாவு
ஞாலம் முடியுமுன் வீழாதம்மா;

## உரிமை நமக்குண்டு

இராகம் : சங்கராபரணம்                தாளம் : சதுஸ்ர ஏகம்

இறந்தவர்க்கு இரங்கிடுதல் அன்பு — இதை
மறந்தழுதால் நமக்கு ஏது பண்பு.

உதவிசெய்ய உரிமை நமக்குண்டு — மறை
பதவிதரும் கடமை எனக் கண்டு,

பலியுடனே செபதபத்தைச் சேர்த்து — நிறை
பொலிவுடனே தான தர்மம் கோர்த்து
கலிபெருகும் கடுஞ்சுடரைத் தீர்த்து — இறை
வலிஉருகும் நெடும்பரிவை ஈர்த்து.

["நவம்பர் மாத நற்சிந்தனை" என்ற நிகழ்ச்சியில் — வானொலியில் ஒலிபரப்பப்பெற இருக்கும் இரு பாடல்கள்.]

இசையமைப்பு :
எம். யே. தாஸ்,

எழுதியவர் ;
நீ. மரிய சேவியர்.

---

## இரு கடல்கள்

பலஸ்தின நாட்டில் இருகடல்கள் உண்டு. அவற்றில் ஒருகடலில் நிறைய மீன்கள் இருக்கின்றன; மரங்கள் அதன் கிளைகளை அந்தக் கடலின்மேல் பரப்பிச் செழித்து நிற்கின்றன. அந்தக் கடலின் கரையில் சிறுவர்கள் விளையாடுகிறார்கள். ஏன் நம் யேசுகூட அந்தக் கடலை விரும்பினார். அந்தக் கடற்கரையோரத்தில் எத்தனையோ உவமைகளைச் சனங்களுக்குப் போதித்திருக்கிறார். அதுமட்டுமன்றி அந்தக் கடற்கரைக்கு அப்பால் உள்ள வனாந்தரமொன்றில் ஐந்து அப்பங்களைப் பெருக்கி ஐயாயிரம பேருக்கு உணவழித்தார். குன்றுகளில் இருந்துபாயும் ஜோர்தான் நதி தன் நன்னீரை இந்தக் கடலுக்குக் கொடுக்கின்றது. இந்தக் கடலின் கரைகளில் மனிதர் தமது வீடுகளையும், புள்ளினங்கள் தமது கூடுகளையும் கட்டி சந்தோஷமாக வாழ்கின்றனர். ஏனெனில், அந்தக்கடல் வாழ்வளிக்கின்றது. அது தான் கலிலேயாக் கடல்;


ஜோர்தான் நதி தெற்கில் இன்னொரு கடலினுள் விழுகின்றது. அங்கே மீன்கள் துள்ளி விளையாடுவதில்லை. சிறுவர்களின் சிரிப்பொலியையும், பட்சிகளுடைய இனிய கீதங்களையும் அங்கே கேட்கமுடியாது; மனிதனோ, மிருகமோ அன்றேல் பறவைகளோ அந்த நீரைக் குடிப்பதில்லை.

ஜோர்தான் நதியானது இருகடல்களுக்கும் தனது நீரை வழங்குகிறது; அப்படியானால் இந்தப் பெரிய வேறுபாட்டுக்கு என்ன காரணம்? ஆம் அங்கு ஒரு வேறுபாடு உண்டு. கலிலேயாக்கடல் தான்பெறுகின்ற ஜோர்தான்நதி நீரைத் தன்னகத்தே வைத்திருப்பதில்லை. ஒவ்வொரு சொட்டுநீரையும் அது பெற்று அளிக்கிறது. பெறுவதும், அளிப்பதும் சமமான அளவில் நடக்கிறது. ஆனால், மற்றக் கடலானது ஒவ்வொரு சொட்டு நீரையும் தான் பெற்று, தன்னகத்தே வைத்திருக்கிறது. பொறாமைபிடித்த அந்தக் கடலின் பெயர்தான் சாக்கடல். கலிலேயாக்கடல் வாழ்வழிக்கிறது. ஆனால், சாக்கடலோ ஒன்றும் கொடுப்பதில்லை.

பலஸ்தீனத்தில் இருகடல்கள் உண்டு. உலகில் இருவகை மனிதர் இருக்கின்றனர்; நாம் இதில் எந்த வகையைச் சார்ந்தவர்?

(ரி. ஆர். மனோகரன் — இளவாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அன்புள்ள தம்பி, தங்கையரே வணக்கம் !**

உள்ளத்தில் ஒளி உண்டாயின் வாக்கிலும் ஒளி உண்டாகும். உங்கள் உள்ளம் தேவபக்தி நிறைந்த நேர்மை உள்ளமாய் இருக்கட்டும். நாளாந்தம் உங்கள் வேத கடமைகளை ஒழுங்காக அனுசரியுங்கள். புனித டோமினிக் சாவியோ, புனித ஞானப்பிரகாசியார், புனித மரிய கொறற்றி போன்று பாலப்பருவத்தின் முழுப்பயனையும் அடைந்து விட்ட இளம் சுத்தவாளர்களில் ஒருவரை உங்கள் பாது காவலராகத் தெரிந்து கொள்ளுங்கள். நேர்மையும், நல்லொழுக்கமும் உள்ளவர்களாய் வளர வரம் கேளுங்கள்.

— அண்ணு

# நம்பிக்கையில் ஒளி

மேரி அவசர அவசரமாகத் தன் காலைக் கடனை முடித்துக் கொண்டாள். "பாடசாலைச் சேவை", பஸ்ஸைப் பிடிக்காவிட்டால் பாடசாலைக்குப் போவதற்கு இனி வேறு பஸ் இல்லை. எனவேதான் தாயிடம் விடைபெற்றுக் கொண்டு ஒரே ஓட்டமாக ஓடினாள் ஸ்டாண்டை நோக்கி. பஸ் போய் விடுமோ எனும் ஏக்கத்தில் வந்த மேரிக்கு ஸ்டாண்டிலுள்ள தோழிகளின் வரவேற்பு ஏக்கத்தைக் குறைத்தது. குறித்த நேரத்தில் பஸ் வந்ததும் மேரியும் அவளது தோழிகளான விஜி, ராஜி, றேஜி ஆகியோரும் பஸ்ஸில் ஏறிக் கொண்டனர். பிறசமயத்தவர்களான மேரியின் தோழிகளுக்கும், மேரிக்கும் பஸ்ஸிற்குள் ஏற்படும் வழக்கமான விவாதம் தொடங்கியது. அன்றைய விவாதத்தில் நம் மரியன்னையே இடம் பெற்றாள்.

"எமது மரியன்னை மிகக் கருணை உள்ளவள். அவள் தூயவள். அவளை நம்பினோர் கருணை பெறுவர். அவள் அனைவாதும் நம்பிக்கையில் ஒளி". இது மரியன்னையில் அணைகடந்த அன்பு கொண்ட மேரியின் வாக்கு. அன்றைய நாள் ஐந்தாம் வகுப்பு எண் கணிதப் பரீட்சை நடக்க விருப்பதையும் ஒருவரும் சோதனைக்கு ஆயத்தம் செய்யாததையும் ஆசிரியையின் சகிக்க முடியாத தண்டனையையும் உள்ளத்திற் கொண்ட ராஜி, "மேரி தேவதாய் 'நம்பிக்கையில் ஒளி' என்று உளறுகிறாய். அவள் உண்மையில் 'நம்பிக்கையின் ஒளி'யானால் இன்றைய நம் எண்கணிதப் பரீட்சை தடைப்படட்டும் பார்க்கலாம்" என்றாள் கிண்டலாக. அதை ஆமோதித்தனர் ராஜீயின் சகாக்களான விஜி, றேஜி.

"சரி அவள் கருணையால் இன்றைய பரீட்சை நிகழாது விட்டால் மரியன்னைக்கு நீங்கள் செய்யும் வெகுமதி என்ன?" என்றாள் மேரி மரியன்னையின் நம்பிக்கையுடன். சோதனை நின்று விட்டாலே தேவையில்லை என்னும் நோக்கத்துடன் இருந்த அவர்களுக்கு மரியன்னைக்கு எது கொடுத்தாலும் சரி தானே! "மேரி உன் மரியன்னைக்கு ஓர் அழகான பூமாலை செய்து தருகிறோம்" என்றாள் விஜி.

"போங்கடி போங்க. இந்த ஒரு பூமாலைக்காக மரியன்னை நம் பரீட்சையை நிறுத்துவதா? அவளிற்குப் பூமாலை தேவையல்ல" என்றாள் மேரி. "அப்போ என்ன வேண்டும் உடனே கூறு. எது கொடுப்பதற்கும் தயார்" என்றாள் றேஜி. மேரி சற்று யோசித்துக் கொண்டு ஏதோ புரிந்து விட்டவள்போல், "சரி உங்களுக்கு மரியன்னை இக்கருணையைச் செய்தால் வருகிற சனிக்கிழமை மரியன்னை கோயிலுக்கு என்னுடன் வந்து அவளுக்கு நன்றி கூறுவதாக வாக்குக் கொடுங்கள்" என்றாள்.

அவர்கள் மூவரும் மேரியின் நிபந்தனையை ஆமோதிப்பதற்கும், பஸ் பாடசாலை ஸ்டாண்டை அடைவதற்கும் நேரம் சரியாயிருந்தது. மூவரும் ஏக்கத்துடன் பாடசாலையையடைந்தனர். நேரமும் மெல்ல மெல்லக் கழிந்து கணிதப் பாடநேரமும் வந்தடுத்தது. மேரியின் சகாக்கள் ஏக்கத்துடன் ஆசிரியரின் வரலவையும் கேலியுடன் மேரியையும் நோக்கிக் கொண்டிருந்தனர். மேரியோ மிகவும் நம்பிக்கையுடன் மரியன்னையை வேண்டிக்கொண்டிருந்தாள். பாடநேரம் தொடங்கி அரை மணி ஆகியும் கணக்காசிரியை வரவில்லை. பரீட்சையும் நடக்கவில்லை. மேரியின் இதயத்தில் "நம்பிக்கையின் ஒளி" பிரகாசித்துக் கொண்டிருந்தது. பாடநேரம் முடிந்ததும் ராஜி, விஜி, றேஜி ஆகியோர் அக்களிப்பால் துள்ளிக் குதித்தனர். தேவதாய்க்கு மனமார நன்றி செலுத்தி, மேரியின் நிபந்தனையையும் நிறைவேற்றினர். அன்று தொட்டு மரியன்னையே அவர்களின் "நம்பிக்கையின் ஒளி"யாகத் திகழ்ந்தாள். அவளே நம் அனைவரதும் "நம்பிக்கையில் ஒளி" யாகத் திகழ்வாளாக.

செல்வி தே. பற்றிமா;
உடுவில்.

# மகனே நான் உன்னைக் காண்கிறேன்

அதோ ஒரு சிறிய கிராமம். அக்கிராமத்தின் நடுவே பெரிய மாடி வீடு. அம்மாடி வீட்டில் ஒரு செல்வந்தர் வசிக்கின்றார். அவருக்கு ஒரு மகன் இருக்கின்றான். அவரும் மனைவியும் மகனும் அவர்களது வேலைக்காரப் பெண்ணும்தான் அந்த வீட்டில் வசிக்கிறார்கள். ஒரு நாள் திடீரென வீடு அல்லோல கல்லோலப்பட்டது. சாப்பாட்டு அறையிலிருந்து, "ஐயோ அம்மா அடுப்புத் தீப்பிடித்து விட்டதே" என்ற கூக்குரல் கேட்டது. மேல் மாடியில் உறங்கிக் கொண்டிருந்த செல்வந்தருக்கும், அவர் மனைவிக்கும் இச்சத்தம் கேட்கவில்லை. ஆதலால், வேலைக்காரப் பெண் மேல் மாடிக்கு ஏறிச் சென்று கூக்குரலிட்டாள். அதைக் கேட்ட செல்வந்தரும், மனைவியும் எழுந்து கீழே ஓடி வந்தார்கள். இதற்குள் சாப்பாட்டு அறையிலும் தீ பற்றிவிட்டது. அவர்கள் தீயை அணைக்க முயன்றார்கள். முடியவில்லை. ஆதலால், தேவையான பொருட்கள் எல்லாவற்றையும் எடுத்து வெளியே போட்டார்கள். தேவையான பொருட்களையாவது காப்பாற்றி விட்டோமென்று பெருமூச்சு விட்ட செல்வந்தர் "ஐயோ என் ஆசை மகன் எங்கே?" என்ற மனைவியின் அழுகுரல் கேட்டுத் திடுக்குற்றார். அப்பொழுது, தான் அவருக்கும் மகனின் ஞாபகம் வந்தது. மகனே, மகனே என்று இருவரும் கூப்பிட்டார்கள். கடைசியாக மகன் மேல் மாடியில் நிற்கக் கண்டார்கள். நெருப்போ மேல்மாடியிலும் பற்றிவிட்டது. தகப்பனார் கீழே நின்று மகனைக் காண்கிறார். ஆனால், அவனுக்குத் தகப்பனைத் தெரியவில்லை. அவன் அப்பா, அப்பா என்று அலறுகிறான். தகப்பன் மகனை நோக்கி, "மகனே, நான் உன்னைக் காண்கிறேன், நீ கீழே குதி. தீ ஆபத்தில் சிக்காதபடி நான் உன்னைக் காப்பாற்றுவேன்" என்று கூறினார். ஆனால், அவனோ அப்பா எனக்கு உங்களைத் தெரியவில்லை. நான் எப்படிக் கீழே குதிப்பேன். நான் குதிக்கவே மாட்டேன் என்று மறுக்கிறான். இறுதியில் நெருப்பில் எரிந்து உயிர் துறக்கிறான். ஆம், சகோதரரே, நாமும் அச்சிறுவனை ஒத்தவர்களாகவே இருக்கின்றோம், ஏனெனில், கடவுள் நம்மைக் காண்கிறார். அதனால் அவர் நம்மை நரக நெருப்பில் விழாது தடை செய்வதற்காக நம்மை மோட்சத்திற்கு அழைக்கிறார். நாமோ அவர் சொல்லைக் கேளாது நரக வேதனைக்கு ஆளாகிறோம். அந்தத் தந்தையைப் போல நமது நல்ல தந்தையும், நம் ஒவ்வொருவரையும் நோக்கி, "மகனே நான் உன்னைக் காண்கிறேன்" என்று கூறுகிறார். ஆதலால் நாம் அவரைக் காணாவிட்டாலும் அவர் நம்மைக் காண்கின்றார் என்பதை மனத்தில் கொண்டு அவர் நமக்குப் படிப்பிப்பவற்றைப் பக்தியோடு கற்று, நரக நெருப்புக்கு ஆளாகாது நித்திய மோட்ச பாக்கியத்தை அடைவோமாக.

— தவம்

## அருள்வாய் நீ!

அன்புத் தாயே அன்னைமரி
என்பும் உருகிட வேண்டுகிறேன்
துன்பம் என்னை ஆட்கொள்ளத்
துடியாய்த் துடித்து உழல்கின்றேன்
என்னுள் நானே கேட்கின்றேன்
ஏன்தான் இறைவன் படைத்தானே
தன்னைத் தந்து ஆட்கொண்ட
தயாபரன் யேசு தாயே நீ
என்னை முழுதும் ஆட்கொண்டு
என்மீ திரக்கம் காட்டம்மா
பொன்னும் பொருளும் போகமுமே
பொல்லா உலகின் செல்வமாம்
மன்னும் உலகில் மனிதன்நான்
மாடாய் நன்கு உழைத்தாலும்
நன்மை தன்னைக் கண்டிலேன்
நாடும் போற்ற வாழ்கிலேன்
என்னல் நன்மை தானுண்டோ
ஏழை எனக்குக் கூறம்மா
துன்பம் தன்னை நீக்கியே
தூய வாழ்வை அருள்வாய் நீ!

(ஏ. டபிள்யு. அரியநாயகம்)

# இளமைப் பருவத்தில் பெரியார்

அவனின் தந்தை ஒரு தனவந்தர், அவனோ குறும்புக்காரன், முற்கோபி, திடநெஞ்சமுள்ளவன்; ஆனால், புத்திசாலி; ஒருமுறை தந்தையின் பேனாவையே திருடி அகப்பட்டுக் கொண்டவன். அடி கிடைத்தது, பேனாவும் கிடைத்தது; ஒருநாள் தங்கைக்குக் கணக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தான். ஒரு கணக்கை அதிக நேரம் விளங்கப்படுத்தியபின் அந்தக் கணக்கைச் செய்யும்படி சொன்னான். அவளோ திருதிருவென விழித்தாள். 'வெளியே போ' எனக் கத்தினான். அவனின் கோபத்தைக் கண்ட தங்கை அழுது கொண்டே வெளியே போனாள்.

எட்டு வயது. குதிரைச் சவாரி செய்வதில் அவனுக்கு மிகவும் பிரியம். அன்று வீட்டிற்குப் பெரிய பிரமுகர்கள் வந்திருந்தனர். அவனுக்கு நல்ல சந்தர்ப்பம். ஒருவருக்கும் தெரியாமல் குதிரையில் ஏறி வெளியே போய்விட்டான். அது ஒரு முரட்டுக் குதிரை, அது அவனைக் கீழே விழுத்தி விட்டு வீட்டுக்குத் திரும்பிவிட்டது. தனியாக வந்த குதிரையைக் கண்ட தனவந்தர் பயந்துவிட்டார்; நண்பருடன் மகனைத் தேடிப் புறப்பட்டார். சிரித்தபடி வந்துகொண்டிருந்தான் மகன்; கல்வியில் இவன் சிறந்து விளங்கியபடியால் தந்தை இவனை இங்கிலாந்திற்கு அனுப்பினார். கல்வித் திறமைக்காக அவனுக்குக் கிடைத்த புத்தகத்தைப் படித்த அவனுக்கு ஒரு எண்ணம் உதித்தது; தான் பிறந்த நாட்டை அந்நியர் ஆள்வதா? இந்தியா ஒரு போதும் அடிமை நாடாக இருக்கக் கூடாது; அதற்காக உழைக்க வேண்டுமென உறுதி பூண்டான். பதினாறு வயதில்தான் இந்த எண்ணம் அவனை ஆட்கொண்டது; நியாயதுரந்தரர் படிப்பை முடித்துத் தாய்நாடு திரும்பினான். தந்தையின் பேனாவைத் திருடிய இவன் பிற்காலத்தில் பல புத்தகங்களை எழுதினான். இந்தியா சுதந்திரம் அடைந்தபின் முதலாவது பிரதம மந்திரியாகித் தொடர்ந்து 15 வருடங்கள் பிரதமராக விளங்கினார். சிறுவரே யாரென்று இன்னும் தெரியவில்லையா? இவர்தான் ஜவகர்லால் நேரு;

— இளவாலை இளவல்

## உங்களுக்குத் தெரியுமா ?

❋ குதிரையும், கழுதையும் 30 ஆண்டுகளும், கிளி, பொன்னிறக்கழுகு, அன்னம், காகம் முதலியபறவைகள் 100 ஆண்டுகளும், சில கடலாமைகள் 300 ஆண்டுகளும், பூனை, நாய் ஆகியன 20 ஆண்டுகளும் உயிர வாழ்கின்றன என்று உயிர் ஆராய்ச்சி வல்லுனர் கணித்தறிந்துள்ளனர் என்பது...

* * *

லண்டஸ் மாநகர் தன்னில் அடங்கியுள்ள வீதிகள், பூங்காபுகள், அழகிய ஞாபகச் சின்னங்களுடன் கடல்மட்டத்தின் கீழ் தாழ்ந்து கொண்டு போவதாகப் பிரபல பூகோளசாஸ்திரியான திரு. ரேமண்ட் மேயில் கூறுகின்றார். ஆனால், அந்நகரவாசிகள் முறையிட்டுக் கிஞ்சித்தும் அக்கறை கொள்வதில்லை. ஏனெனில், அது ஒவ்வொரு 17 வருடங்களுக்கும் ஒரு அங்குலவீதமே— அதாவது ஒரு நூற்றாண்டில் 6 அங்குலம் மாத்திரமே ஆழ்ந்து கொண்டு போவதையிட்டுத் தான் என்பது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்கல்வி வரலாறும் நவீன மறைக்கல்வி மறுமலர்ச்சியும்

(S. A. I. மத்தியூ, S. S. J.)

(முன் தொடர்ச்சி)

முதன் முதலாக ஞானோபதேசம் போதித்தவர் இரட்சணிய நற்செய்தி கொண்டு வந்த நமது ஆண்டவர் யேசுக் கிறீஸ்துவாகும். நற்செய்தி ஏடுகளிலிருந்து கிறீஸ்துநாதர் போதிப்பதை நாம் ஊன்றிப் பார்ப்போமாளுல் மக்கள் இறைவனைப் பற்றிய அறிவு பெறுவதோடு அவர்கள் நின்று விடக் கூடாது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. கிறீஸ்துநாதர் மக்களின் பூரணமான புதுவாழ்க்கையையே விரும்பினுர்— கடவுள் வாழ்க்கை வாழவேண்டும் என்பது அவர் குரலொலியிலிருந்து தெரிகிறது. கத்தோலிக்க மறுமலர்ச்சி இயக்கமும் அறிவைப் புகட்டுவதோடு அமையாது பிள்ளைகள் வாலிபர்கள், வயதுவந்தவர்கள் அனைவரையும் கிறிஸ்து அரசரின் பிரசைகளாக ஆக்க வேண்டும் என்றுதான் போதிக்கிறது.

உளநூல் முறைப்படி, மக்களின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் தக்கவிதமாகத்தான் கிறீஸ்து போதித்தார். சாதாரண பாமர மக்களுக்கு அவர் போதிக்கும்பொழுது அவர்கள் அன்ருட வாழ்க்கையில் பயன்படுத்தும் பொருள்களையே உதாரணமாகக் காண்பித்து எளிய முறையில் போதித்தார். ஆனல் நிக்கோதேமுஸ் போன்ற அறிஞர்களுக்குப் போதிக்கும்பொழுது ஆழ்ந்த அகண்ட பொருள்களைப் போதித்தார். 'மனிதன் மீண்டும் பிறக்கவேண்டும்' என்று கூறினுர். இவ்வாறே ஜாக்கோபுவின் கிணற்றுக்குத் தண்ணீர் மொள்ள வந்த அந்தப் பெண்மணியிடம் ஆழமான பொருள்குறித்து உரையாடினுர்.

கிறீஸ்துநாதர் எவ்வாறு ஆத்துமங்களிலே இறைவாழ்வு பரிணமிக்கவேண்டும் என்று முயன்று போதித்தாரோ அவ்வாறே தற்கால மறைபோதகர்களும் மாணவர்கள் ஆண்டவனின் அன்பை அறிந்து, அதைச் சிநேகித்து பூரணமான இறைவாழ்வுவாழ அடிகோலவேண்டும். சுருங்கக்கூறின் சிறுவர்களிடத்திலே கிறீஸ்துவை உருவாக்க வேண்டும்.

புனித சின்னப்பர் கூறுவதைக் கேளுங்கள்: "என் சிறு பிள்ளைகளே, கிறீஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்" (Gal 4! 19).

கிறீஸ்துவைத் தொடர்ந்து ஞானோபதேசம் புகட்டியவர்கள் அப்போஸ்தலர்கள். அப்போஸ்தலர்கள் கிறீஸ்துவை மையமாக வைத்துப் போதித்தார்கள். புனித இராயப்பர் கூறுவதைக் கேளுங்கள். 'கிறீஸ்துவை விசுவசிக்கிறவன் எவனே அவன் அவருடைய நாமத்தினுலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று இறைவாக்கினரெல்லாம் அவரைக் குறித்தே சாட்சி கொடுக்கிருர்கள்." இவ்வாறு அப்போஸ்தலர்களின் போதனையனைத்தும் கிறீஸ்துவை மையமாகக் கொண்டனவாகவே அமைந்தன. புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய மடலிலிருந்தும் இதையே காணலாம்.

எனவே அப்போஸ்தலர் கால ஞானோபதேச முறைகள் கடவுளையும் கிறீஸ்துவையும் மையமாகக் கொண்டது. புனித இராயப்பர், சின்னப்பர் இவர்களின் போதனைகளில் பொதிந்து இருந்த செய்திகளிலெல்லாம் தலையானது இரட்சகர் யேசுவும் அவர் கொண்டு வந்த நற்செய்தியுமே. இரட்சணிய வரலாற்றின் நடுநாயகம் கிறீஸ்து. கிறீஸ்துவைப் போதிப்பதற்கு அவர்கள் கையாண்டமுறை இதுதான். விவிலிய நூலிலிருந்து ஒரு பகுதியை வாசித்தல்—அதனைக் கிறீஸ்துவோடு தொடர்புபடுத்தி வாழ்க்கைக்கு உகந்த முறையில் அதாவது வாழக்கூடிய முறையில் பயன்படுத்துதல். இத்தகைய போதனை ஏறக்குறைய 7-ம் நூற்ருண்டு வரை நீடித்தது. இந்தச் சகாப்தத்திலே கிறீஸ்தவர்கள் கிறீஸ்துவைப் பற்றிய அறிவைப் பெறுவதோடு திருப்தி அடைந்ததாகத் தெரியவில்லை. உண்மையான கத்தோலிக்கர்களை எவ்வாறு உருவாக்கலாம் என்பதே அவர்களின் சிந்தனையில் குடிகொண்டிருந்தது. மனனம் செய்வதிலே குறைந்த கவனத்தையே செலுத்தினுர்கள். இக்காலத்திலே புனித அகுஸ்தீன் பின்வருமாறு கூறுகிருர். "ஆதாம் ஏவாள் அகங்காரத்தால் ஆண்டவனிலிருந்து அகன்றதிலிருந்து மீட்பின் வரலாறு முழுமையும் மக்களுக்குப் போதிக்கப்பட வேண்டும்." இக்கால ஞானோபதேசம் திருவழிபாட்டோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. பாஸ்குக் காலத்திலே ஞானஸ்நானம் பெற்று பூசைப்பலியில் முககிய பங்கெடுத்தார்கள். திருவழிபாடுகள் நிறைவேறிய பாஷைகளுக்குப் புரியும் ஒன்ருக இருந்தது. பிள்ளைகளின் ஞானோபதேச அறிவு வளர்ச்சிக்குப் பெற்ருேரே பொறுப்பாயிருந்தார்கள்.

இது இவ்வாருக மத்திய கால ஞானோபதேச வரலாற்றைப் பார்ப்போம். ஆரம்பத்திலிருந்த ஆர்வ உணர்ச்சி அருகிப் போயிருப்பதை இக்காலப் பாப்பில் காணலாம். பிள்ளைகள் பெரியோர்களின் சூழலில் வளர்ந்து அவர்கள் மறையின்பால் கொண்டிருந்த மனப்பாங்கைப் பெற்ருர்கள். அறிவு அதிகரித்ததேயொழிய சீவியம் செழிப்புமிக்க கத்தோலிக்க சீவியமாயிருக்கவில்லை. ஆனல் முன்பு இருந்த வாழ்க்கையோடு தொடர்புடைய மறைப்பயிற்சி இப்போது மனைகளில் மங்கிவிட்டது. மத்திய காலத்திலே குறிக்கப்பட்ட வேதவிளக்கங்களை, விசுவாச சத்தியங்களைப் போதிப்பதில் க[illegible]திஞர்கள். உதாரணமாக விசுவாசமந்திரம், பரமண்டல மந்திரம் ஆகியவைகளைக் குறிப்பிடலாம். ஏழாம் நூற்ருண்டு தொடங்கி பதினேந்தாம் நூற்ருண்டு இறுதிவரை உள்ள காலப்பகுதியில் சிறப்புமிக்க அமிசங்கள் பல ஞானோபதேச முறையில் அடங்கியிருந்தன. எனினும் மறைப்பயிற்சி சிறப்புற்று இருக்கவில்லை என்பது அறிஞர்கள் முடிபு. மனம்பண்படுத்தப்படவில்லை. அறிவு விளக்கம் தானில்லை. எனவே மத்தியகால மக்கள் விளக்கங்கள் இன்றி சிலர் குறிப்பிடுவதுபோல குருட்டாட்டத்தில் நிலைநின்றனர். குருமார் அறிவுக் களஞ்சியங்களாக, வழிகாட்டிகளாக இருப்பதற்குப் பதிலாக அஞ்ஞான இருளில் ஆழ்ந்திருந்தனர். செல்வத்தைச் சேகரிப்பதில் சிந்தை செலுத்தினர். இத்தகைய சீர்கேடுகள் மதப்புரட்சிக்கு அடிகோலியதில் ஆச்சரியம் எதுவுமிருப்பதாகத் தெரியவில்லை.


வளரும்.

# கத்.யாத்திரைத் தலங்களின் மத்தியதானமாகிய நித்தியநகரம்

— ஞானம்

அப்போஸ்தலரான சம்பேதுருவானவர் வேதசாட்சியாக உயிர்துறந்து அமரத்துவமெய்திய காலமுதல் நித்திய நகரென அறியப்படுகின்ற ரோமாபுரியானது அகிலமுழுவதிலுமுள்ள 55கோடி கததோலிக்க மக்களுக்கெல்லாம் ஒரு பெரும புனிதநகராய், அவர்களின் யாத்திரைத் தலங்களுக்கெல்லாம் மத்தியதானமாய், ஆராய்ச்சியாளர்களுக்கும் யாத்திரிகர்கள் என்ற பெயரே வழங்குகின்றது. சம்பேதுருவானவர் மகாலயத்திலுள்ள பாப்பரசரின் பெரிய பலிபீடமானது அப்போஸ்தலர்களின் முதல்வரான அவரின் கல்லறைக்குமேலாக அமைந்திருப்பதும் அவ்வாலயம் மாட்சி பெற்றிலங்க மற்ருேர் முதன்மையான காரணமாகும்.

தோலிக்க திருச்சபையுடன் ஒற்றுமைப் படுத்துமாறு பொதுச்சங்கம் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியின் விளைவாக அருளப்ப பாப்பானவரும், கன்ரர்பறி அங்கிளிக்கன்சபை அதிமேற்றிராணியாரான டக்றர் ரும்சே அவர்களும் 1966ஆம் ஆண்டு ஒருவரையொருவர் நேர்முகமாகச் சந்திக்கநேர்ந்த சரித்திரபூர்வமான சந்திப்பு



நடுநாயகமாய்த் திகழ்கின்றது. ஏன்? இன்றுதானும் ரோமர்கள் அங்குவரும் தரிசகர்களை "யாத்திரிகர்கள்" என்றே அழைக்கின்ருர்கள். ஏனெனில் அங்கு வருகிறவர்கள் சம்பேதுரு, சம்பாவிலு அப்போஸ்தலர்களின் கல்லறைகளில் செபஞ்செய்யவே வருகிருர்களென அவர்கள் கருதுகிருர்கள். மேலும் இன்றைய உலகவழக்கில் தேச சஞ்சாரிகளுக்கும், தேச

சமீபத்திலே புனிதர்பட்டம் அருளப்பட்ட ஆங்கில வேதசாட்சிகள் நாற்பதின்மரிலும் பன்னிருவர் ரோமைநகரில் வசித்துச் சம்பேதுரு, சம்பாவிலு அப்போஸ்தலர்களின் மகாலயங்களாகிய திருசேத்திரங்கள் இரண்டிற்கும் அடிக்கடி சென்று வேண்டுதல்செய்து வந்தனர். தங்கள் சுவநாடு சென்று வேதசாட்சியத்துவம் எய்துவதற்காக அப்புனிதநகரை விட்டுப் பிரிந்துபோகமுன்னும் அவைகளைத் தரிசித்துத்தான் சென்றனர். அதனல் பேதுருவானவர் ஆலயத்திலே இவர்கள் புனிதர்பட்டம் அருளப்பட்டமையும், சம்பாவிலுவானவர் ஆலயத்திலே அவர்களை மகிமைப்படுத்துமுகமாக யாத்திரிகர்கள் பூசை நடைபெற்றதும் பொருத்தமாகும் எனலாம்.

சம்பேதுருவானவரின் கல்லறையைத் தன்னகத்தில் கொண்டிருப்பதால் புனிதமுற்று விளங்கும் அவரின் மகாலயமும் ஆங்கில யாத்திரிகர்களுக்கு ஓர் அருமையானதே. ஏனெனில், இங்கிலாந்திலே புரொட்டஸ்தாந்த சமயப்புரட்சி ஏற்படுமுன் அந்நாட்டின் அரசர்கள் இதனைத் தங்கள் பாதுகாப்பில் கொண்டிருந்தார்கள். மேலும் 23ஆம் அருளப்ப பாப்பானவர் 2-வது வத்திக்கான் பொதுச்சங்கத்தைக் கூட்டவேண்டுமெனச் செய்த தீர்மானத்தைப் பகிரங்கமாகப் பிரசித்தஞ்செய்தது இம்மகாலயத்திற்ருன். இன்னும் உலகிலுள்ள கிறிஸ்தவ சபைகளையெல்லாம் ஒன்றுகூட்டிக் கத் நிகழ்ந்தது இம் மகாலயத்திற்ருன்.

யேசுசபை வேதசாட்சிகள் பலரும் சம்பந்தப்பட்ட மட்டிலே பாவிலுவானவர் மகாலயம் அச்சபையாரின் விசேடப்பட்ட பற்றுதலையும், மதிப்பையும் பெற்று விளங்குகிறது. இதிலுள்ள திவ்வியநற்கருணைச் சிற்ருலயத்திலுள்ள தேவதாயாரின் அற்புத திருச்சுரூபத்தின் முன்பாகத்தான் புனித இஞ்ஞாசியாரும், அவர் தோழர்களும் திருமறைச் சம்பிரதாயப்படி முதல் வாக்குத்தத்தம் செய்தார்கள். அறக்கொயெலி எனும் குன்றின்மேல் நிலவும் இம்மகாலயத்தின் பாதுகாப்பாளர்களாகப் பிரான்சிஸ்கன் சபைக்குருமார் ஏழு நூற்ருண்டுகளுக்குமேல் தொடர்பாயிருந்து அதனைப் பூசிதமாகப் பேணிக் காத்துவருவதும் சரித்திரப் பெருமையானதே. ரோமைநகரின் மத்தியிலே செங்குத்தான 122படிகளைக் கொண்ட குன்றின் உச்சியிலே அருமையான சித்திர சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்டதாய் நிறுவிநிற்கின்றது இவ்வாலயம்.

இந்த ஆலயத்திற்ருன் பெரிய கொன்ஸ்தாந்தீன் சக்கிரவர்த்தியின் தாயாரான புனித எலேனம்மாளின் திருஅஸ்திகள் இருந்துவருகின்றன. தம்முடைய தாயாரின் செல்வாக்கினுலேயே இவர் கிறிஸ்து சமயத்தின் பரிபாலனராஞர். தமது பிரமாண்டமான சக்கிராதிபத்தியத்தின் அதிகாரபூர்வமான சமயமாகக் கிறிஸ்துசம

(தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி

### கார்த்திகை — 1970

| | | | |
|---|---|---|---|
| 22 | ஞாயிறு | கிறிஸ்து அரசர் | [வெ] |
| 23 | திங்கள் | தினப்பூசை | [ப] |
| 24 | செவ்வாய் | புனித சிலுவை அருளப்பர் | [வெ] |
| 25 | புதன் | தினப் பூசை | [ப] |
| 26 | வியாழன் | புனித லெயஞர்ட் | [வெ] |
| 27 | வெள்ளி | புதுமைப் பதக்கம் | [வெ] |
| 28 | சனி | தினப் பூசை | [ப] |

*சத்தியவேத பாதுகாவலன்*

# கிறிஸ்துவின் உருவம்

சுவிசேஷத்தில் ஒரு சிறிய கடுகுமணியானது எவ்விதம் ஓங்கிவளர்ந்து பெருவிருட்சமானது என்று வாசிக்கின்றோம். கடுகுமணியைப் போலவே மிகச்சிறிய காரியங்களும் முக்கியத்துவ மடையலாம். இத்தத்துவத்தை அழகாக விளக்கும் ஒரு கதையுண்டு.

வர்ணக் கண்ணாடி ஓவியங்களுக்கான ஒருபோட்டி நடந்தபோது கிறிஸ்துநாதரின் உருவத்தைக்கொண்ட ஓர் ஓவியமே பரிசுக்குரியதாகத் தெரிவுசெய்யப் பட்டது. அந்த ஓவியத்தை அமைத்தவன் பதினான்கு வயதினனான ஓர் ஏழைச் சிறுவனாவான். அவ்வோவியத்தை அமைப்பதற்கு வேண்டிய கண்ணாடியை அவனால் எவ்விதம் வாங்க முடிந்ததெனக் கேட்டபோது, அவனளித்த விடையாவது: "ஏனைய ஓவியர் கழித்துவிட்ட சிறுதுண்டுகளை எடுத்தே இதை அமைத்தேன்" என்பதுதான். சிறுதுண்டுக் கண்ணாடிகள் கிறிஸ்துவின் உருவமாக மாறுகின்றன. அழகிய வர்ண ஓவியங்களை அமைக்கும் திறமை எமக்கில்லாதிருக்கலாம். ஆனால், கிறிஸ்துநாதரின் உருவத்தை உலகுக்கு எடுத்துக் காட்டுவதற்கு அத்தகைய திறமை தேவையில்லை

எம்மிலேயே கிறிஸ்துவைப் பிறர் காணக்கூடிய விதமாக நாம் வாழலாம். அச்சிறுவன் தான் தினந்தோறும் தேடியெடுத்த கண்ணாடித் துண்டுகளைக் கொண்டு தன் ஓவியத்தை அமைத்தான். அவ்விதமே தினசரி செய்யப்படும் சிறு சிறு நற்கிருத்தியங்களும், பிறர்சிநேகச் செயல்களும் படிப்படியாகக் கிறிஸ்துவின் உருவத்தை எம்மில் உருவாக்குகின்றன. அப்போது எம்மை நோக்குபவர் எம்மில் கிறிஸ்துவையே காண்பர். இக்கிருத்தியங்களுக்கு அடிப்படையான பரம அன்பும், பிறரன்பும் கிறிஸ்தவன் கொண்டிருக்கும் கிறிஸ்துவினது முத்திரையாகும். "இந்த அடையாளத்தின் மூலம் அனைவரும் உங்களை என் சீடர் என்று அறிந்து கொள்வார்கள்" என்று கிறிஸ்துநாதர் தாமே கூறியிருக்கிறார்.

பிறசிநேகச் செயல்கள் ஒருவரது ஆத்துமத்தைப் பரிசுத்தப்படுத்துவதுடன் அவரோடு தொடர்பு கொண்டவர்களையும் இறைவன்பால் இழுக்கின்றன. எமது பரிசுத்த வேதத்தைப் பிறர் அறியவும், நேசிக்கவும் வழி செய்கின்றன. பெரும்பாலான மக்கள் கிறிஸ்தவரல்லாதாராய் இருக்கும் எங்கள் நாட்டிலே கிறிஸ்துவைப் பிறருக்கு அறிமுகம் செய்து வைக்கும் கடமை எமக்குண்டு. அவருக்கு ஓர் உருவம் கொடுக்காவிட்டால் அது எங்ஙனம் சாத்தியமாகும்? கல்லில் அமைத்த சிலைகளையும், வர்ணம் தீட்டிய ஓவியங்களையும் கண்டு கிறிஸ்துவென யாரும் ஏற்றுக் கொள்வார்களா? தேவநற்கருணையில் கிறிஸ்துவைக் காண்பதற்கு விசுவாசக்கண் இருக்க வேண்டுமே! ஆகவே, பிறமதத்தினர் கிறிஸ்துவைக் காண்பதென்றால், அது நடமாடும் கிறிஸ்துக்களிலேதான். அவர்களது நன்முன்மாதிரிகை எத்தகைய போதனையையும் விட வலிமையுடையதாக இருக்கும். எமது கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் உருவத்தைப் பிரதிபலிக்கும் நிலைக்கண்ணாடிகளாக விளங்குவார்களாக.

*செல்வம் இழப்பது ஒன்றும் இழந்ததாகாது; உடல்நலம் இழப்பது ஏதோ சிறிது இழந்தவர்கள் ஆகின்றோம்; ஆனால் நற்குணம் இழந்தால் எல்லாம் இழந்தவர்களாகின்றோம்.*

— ஓர் அறிஞர்

# பரி, தந்தை.... இலங்கைத் தரிசிப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னும் பரி. தந்தைக்கு அறிமுகஞ் செய்யப்படுவர். அதன் பின்மேடையிலிருந்துஇறங்கி மக்கள் வரிசைகளைத் தாண்டி பரிசுத்த தந்தை முன்போலவே ஜீப்வண்டிமூலம் விமானத்துக்குக் கொண்டு செல்லப்படுவர். விமானம் அப்பொழுது பழைய தளத்தில் ஓட்டப் பாதையில் அவரைக் காத்துநிற்கும். விமானப்படிக்கட்டின் அண்மையில் மகா தேசாதிபதியும், பிரதமரும், கருதினல் கூறே அடிகளாரும், அப்போஸ்தொலிக்க ஸ்தானிகரும் பாப்பரசருக்குப் பிரியாவிடை கூறியருளுவர். படிகளால் மேலே ஏறியவுடன், மீளவும் விமான வாயிலில் நின்று இலங்கை மக்களுக்குப் பிரியாவிடை கூறிய தன்பின் பரிசுத்த தந்தை உள்ளே சென்று அமர்ந்து கொள்வார்.

திருப்பலியில் பரிசுத்த தந்தை ஆங்கில பாஷையையே உபயோகிப்பார். திருவாசிகைளுக்கும், விசுவாசிகளின் செபத்துக்கும், கீர்த்தனங்களுக்கும் இத்தேச பாஷைகளே உபயோகிக்கப்படும். பரமண்டல மந்திரம், விசுவாச உச்சாரணம் முதலியனவற்றில் ஒரேநேரத்தில் மூன்று பாஷைகளும் உபயோகிக்கப்படும். விசுவாசிகள் செபிக்கத் துணைபுரிய பாடகர் குழுவினர் தயாராக இருப்பர். பரிசுத்த தந்தை ஒருசிறு பிரசங்கஞ் செய்தருளுவார். இதன்முன் கருதினல் கூறே சில வார்த்தைகள் பேசுவார். ஆறு பேர் அடங்கிய காணிக்கைப் (Procession) பவனி இருக்கும். செபங்களில் மக்கள் சொல்லவேண்டிய பகுதிகளைத் தெளிவாகவும், பலமாகவும் யாவரும் விசேஷமாகப் பலிபீடத்துக்குச் சமீபத்தில் உள்ளவர்கள் சொல்லக் கேட்கப்படுகின்றனர்.

## மக்களுக்குச் செய்யப்படும் வசதிகள்

மார்கழி 4-ந்தேதி காலை 8மணி தொடக்கமாக ஆகாய விமான நிலைய வாயிற்கதவுகள் திறந்துவிடப்படும். விமான நிலையத்தில் மக்கள் குடிகொள்வதை விமானநிலைய அதிகாரிகள் அனுமதிக்க மாட்டார்கள். கட்டுநாயகாவிலும், அதன் அண்மையிலுமுள்ள விசாரணைப் பங்குக் குருமார் இவ்வைபவத்துக்கு முந்தியநாளே வந்துசேரும் மக்களுக்குத் தத்தம் கோவில் வளவுகளில் தம்மால் கூடிய வசதிகள் அளிக்குமாறும், தத்தம் விசாரணைப்பங்குக் கிறீஸ்தவர்களைத் தூரத்திலிருந்து வரும் மக்களுக்கு உதவியாயிருக்கத் தூண்டவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றனர்.

தெருவீதிகளில் மக்கள் போக்குவரத்துச் செய்யும் முறைகளைப் பற்றிப் பொலிசார் கெட்டியான முடிவுகள் இன்னும் செய்யவில்லை. அவர்கள் இதுபற்றிச்செய்யும் முடிவுகள் பத்திரிகைகள் மூலமாக அறிவிக்கப்படும்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையும், இலங்கைப் புகையிரதப் பகுதியினரும் விசேஷ சேவைகள் தம்மால் கூடிய பகுதிகளில் செய்து உதவுவார்கள்.

பகிரங்க சுகாதார இலாகாவினரும், பகிரங்க வேலை இலாகாவினரும் முறையே சுகாதார, தண்ணீர் வசதிகளை விமான நிலையத்தில் கவனித்தருளுவர். விற்பனை இலாகாவினரும், பாற்சபையினரும் மக்களுக்குத் தேவைப்படும் சிறு உணவு வகைகளினதும், பானங்களினதும் விற்பனைகளுக்குத் தம்மாற்கூடிய ஒழுங்குகளைச் செய்தருளுவர். மருத்துவ முதற்சேவை வசதிகளுக்கும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

## விசேஷ வேண்டுகோள்

மக்கள் யாவரும் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்வதைக் கண்காணிக்கும் அலுவலில் பொலிஸ் பகுதியினர் திருச்சபை அங்கத்தினர் யாவரினதும் உதவியைக்கோரிக் கொள்கின்றனர். பரிசுத்த தந்தைக்குக் கிட்டச் செல்வதற்காகச் சனக்கூட்டம் தள்ளத் தொடங்குமாயின் பெரும் ஆபத்தான நிலைமை ஏற்படக் கூடும். இதன் விளைவாகச் சில மரணங்களும் ஏற்படலாம். ஆகவே தம்பங்குகளுக்குச் சேர்ந்த மக்களுடன் குருமார் வந்து, மக்கள் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்வதில் உதவிபுரியுமாறு பொலிசார் வேண்டுகின்றனர். குடிநீர் போத்தல்களையும், குடைகளையும் தம்முடன் கொண்டு வருமாறு அவர்களைத் தூண்டிவிடவும் பங்குக் குருமாரை பொலிசார் பரிவுடன் கேட்டுக் கொள்கின்றனர்.

## விசேஷ புகையிரத சேவை

இலங்கையின் ஏனைய பகுதிகளிலிருந்து கட்டுநாயகாவுக்குப் பயணம் செய்து திரும்பவிருக்கும் பிரயாணிகளின் வசதிக்காக ஒழுங்குசெய்யப்படவிருக்கும் விசேஷ புகையிரத சேவைகளைப்போலவே யாழ்ப்பாணம், மன்னார் பகுதிகளிலிருந்து பயணம் செய்யவிருக்கும் பிரயாணிகளுக்காகவும் விசேஷ புகையிரத சேவை ஒழுங்கு செய்யப்படும். இதுபற்றிய விபரங்கள் பின் அறிவிக்கப்படும்.

● சின்னப்ப பாப்பரசர் நிகழும் கார்த்திகைமாத இறுதியிலே பிலிப்பைன்ஸ் நாட்டுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் விஜயஞ்செய்வதோடு தமது ஆட்சிக்காலத்திலே உலகின் ஐந்து கண்டங்களையும் தரிசித்த ஒரு பாப்பானவர் எனும் அரிய சாதனையை நிலைநாட்டவிருக்கின்றார். இந்த விஜயமானது அவர் இத்தாலிக்கு வெளியே நடத்தவிருக்கும் எட்டாவது வெளிநாட்டுப் பயணமாயிருக்கும்.

**இலங்கை வானொலியில்**
**கத்தோலிக்க நிகழ்ச்சி**

● கத்: உலகின் செய்திச் சுருள்

**நவம்பர் நற்சிந்தனை**

● வளர்பிறை நாடக மன்றத்தினரின்

**"வார்த்தையின் வடிவம்"**

அளிப்பவர் :
நீ. மரியசேவியர்

நாள்:
21-11-70 சனிக்கிழமை

நேரம்:
பி. ப: 7-00—7-30

# கத்தோலிக்க யாத்திரைத் தலங்களின் மத்தியதானமாகிய...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யத்தை அங்கீகரித்துப் பிரகடனஞ் செய்தருளினார். அவராலேயே முதற் கத்தோலிக்க கோவில்களும், மகாதேவாலயங்களும் கட்டியெழுப்பப்படலாயின.

சம்பாவிலுவானவர் மகாலயம் இருந்துவரும் அறக்கொடெலி குன்றிற்கு அண்மையில் தான் புனித இஞ்ஞாசியாரால் அடியிடப்பட்ட றோமைக் குருமடம் இருந்துவாலாயிற்று. இதில் மாப்புமாரும், புனிதர்களுமான அநேகர் மறைக்கல்வி பயின்றனர். புனிதர்பட்டம் அருளப்பட்ட ஆங்கிலவேத சாட்சிகள் நாற்பதின்மரிலும் பதின்மர் இதில் பயின்றவர்கள். ஆனால், இந்த றோமைக் குருமடம் இன்று ஓர் உயர்தர அரசாங்க கல்விச்சாலையாய் இருந்து வருகிறது. ஆனால், இதற்கு அருகாமையிலே அதிகம் சிறந்த சூழ்நிலையிலுள்ள ஒரு குருமடத்தில் இப்போது யேசுசபையார் தங்கள் எதிர்கால குருமாருக்குப் பயிற்சியளித்து வருகின்றனர். இன்று இந்தக் குருமடமே கிறகோரியாரின் சர்வகலாசாலையென உலகப் பிரசித்திபெற்று மிளிர்கின்றது.

போமுகிலோ, ரோமைப்பிலோ உலகிலுள்ள பிரபல சித்திர, சிற்பக் கலைஞர்கள் பலரும் கண்டு பிரமிக்கும்படியான சித்திர, சிற்ப வேலைப்பாடுகளிலோ தனக்கு ஒப்பாரும், மிக்காருமில்லாது உலகின் மகாப் பிரமகண்டமான ஆலயமெனப் பெயர்பெற்று, யாத்திரிகர்கள் காட்சிப்பிரியர்கள் அனைவரினதும் கண்ணையும், கருத்தையும் ஒருங்கே கவர்ந்துநிற்கும் சம்பேதுருவானவர் மகாதேவாலயத்தில் ஆங்கில வேதசாட்சிகள் நாற்பதின்மருக்கும் புனிதர்பட்டம் அருளும் திருவைபவம் சம்பிரதாயமாக நடைபெற்றபோது, அவ்வாலயம் அளித்துநின்ற கண்கொள்ளாக் காட்சியைப் பலவர்ணங்களில் அழகுறக் காண்பிக்கும் பிரதிமைப் படங்களை 'யூனிவேர்ஸ்' எனும் பிரபல கத்தோலிக்க பத்திரிகையில் கண்ணுற்றவர்கள் அத்திருவைபவம் எத்துணை பெரும் மாட்சியாய் இருந்திருக்குமோவென்று சிந்தித்திருப்பர் என்பதில் சந்தேகமில்லை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. சீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1970ஆம் ஆ. கார்த்திகை மீ 21 ஆம் உ. சனிக்கிழமை அச்சிடப்பட்டு [illegible] "[illegible] மிறல்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300; தாபிதம்: 1876;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org